**இராம கோபாலன்**
*நிறுவன அமைப்பாளர்*

59, அய்யா முதலித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.
தொலைபேசி : 044-28457676

6-3-2010

**சுவாமி நித்யானந்தரின் விவகாரத்தில் தமிழக முதல்வர் முதலைக்கண்ணீர்**
**இந்து முன்னணி நிறுவன அமைப்பாளர் இராம கோபாலன் கண்டனம்!**

சுவாமி நித்யானந்தர் விவாகரத்தில் தமிழக முதல்வர் பேசியிருக்கும் பேச்சு மக்களை முட்டாளுக்கும் முயற்சி தான். மூன்று நாட்களுக்கு அந்த ஒலி-ஒளிபரப்பை வேடிக்கை பார்த்து, கூலிப்படைகள் கொண்டு வன்முறை நடந்து முடிந்தபிறகு, இளைஞர்கள் உள்ளங்களில் நஞ்சு கலக்கப்பட்ட பிறகு, திடீரென்று அவர் 'அதிர்ச்சி' அறிக்கை வெளியிடுவது கேலிக்கூத்து.

பகுத்தறிவு இயக்கம் என்று கூறிக்கொள்கிறவர்கள் இந்துக்களை மட்டும்தான் தாக்கிப் பிரச்சாரங்களையும், நாடகங்களையும் நடத்தி வருகிறார்கள். கிறிஸ்தவ பாதிரிகளைப் பற்றி அருவருக்கத்தக்க அசிங்கமான செய்திகள் வந்தபோது கோபம் வராத முதலமைச்சருக்கு, நித்யானந்தா நிகழ்ச்சி கோபக்கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

ஏராளமான சினிமாக்களில், டி.வி.க்களின் நெடுந்தொடர்களில் தடயம் தெரியாமல் கொலை செய்வது எப்படி என்பதை விவரமாகக் காட்டி அதனால் ஏராளமான இளைஞர்களும், குடும்பங்களும் சீரழிந்திருப்பதையும் குற்றங்கள் அதிகரித்திருப்பதையும் முதல்வர் மௌனமாகத்தான் பார்த்துக் கொண்டிருந்தார், பார்த்துக் கொண்டிருக்கிறார். அவை எல்லை மீறல்களாகத் தெரியவில்லை. அவற்றைக் கண்டிப்பது அரசின் பொறுப்பு என்பதும் புரியவில்லை.

முதல்வரின் கவலை வெறும் முதலைக் கண்ணீர்தான் என்பது விவரம் அறிந்தவர்களின் கருத்து. பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டும் கலையில் திரு. கருணாநிதி கைதேர்ந்தவர்.

சந்தடிசாக்கில் சாமியார்களைக் கண்காணிக்க அறநிலையத்துறை மூலம் ஒரு குழுவை அமைக்கப் போவதாக சில ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்தி உண்மையானால் அதனை இந்து முன்னணி வன்மையாகக் கண்டிக்கிறது.

குற்றமற்றவர்கள் தான் குற்றவாளிகளைத் தண்டிக்க முடியும். ஒரு குற்றவாளி இன்னொரு குற்றவாளியைத் தண்டிக்க நினைப்பது வேடிக்கையானது. அறநிலையத்துறையே குற்றவாளிகளின் கூடாரம் என்று பக்தர்கள் கருதுகிறார்கள். இந்நிலையில் அறநிலையத்துறைக்கு அதிகாரம் கொடுத்துவிட்டால் துறவிகளுக்கு லைசென்ஸ் கொடுப்பதை ஏலம் விட்டு பணம் பார்த்துவிடுவார்கள்.

அறவழிகாட்டும் ஆன்றோர் பேரவை, ஆச்சார்ய சபை போன்றவற்றிற்குத் தான் அந்தத் தகுதி உண்டு. அரசின் குரங்குச் சேட்டையை இந்து முன்னணி அனுமதிக்காது.

அரசியல்வாதிகளின் பகல் இரவு நடவடிக்கைகளைக் கண்காணிக்க ஒரு குழு அமைத்து, அந்தக் குழு தன்னையும் தனது கட்சியையும் கண்காணிக்க வேண்டும் என்று முதல்வர் அறிவித்தால் அவர் மீது நம்பகத்தன்மை ஏற்படும்.

அனைத்து சாமியார்களையும் மிரட்டி பணிய வைப்பதற்காக தமிழக முதல்வர் இப்படி ஓர் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்.

முதல்வன் படத்தில் காட்டப்படுவதுபோல, திரு. சோ போன்ற நேர்மையான ஒருவரிடம் ஆட்சியை ஒருநாள் ஒப்படைக்கத் தயாரா?

என்றும் தேசியப் பணியில்

**இராம கோபாலன்**
நிறுவன அமைப்பாளர்

**இந்த அறிக்கையைத் தங்கள் பத்திரிகையின் அனைத்து பதிப்புகளிலும் வெளியிட வேண்டுகிறோம்.**